

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று (13.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்6, 78வது வார்டு, சூளை, அங்காளம்மன் கோயில் தெரு, உமா சுராஜ் மஹாலில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் நிதியுதவிகள் வழங்கினார். இந்த நிகழ்வின் போது மேயர் திருமதி.ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், மாமன்ற உறுப்பினர்வேலு ஆகியோர் உடனிருந்தனர்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நேற்று (13.12.2023) சென்னை நந்தனம், ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில் அனைத்து துணைப் பதிவுத்துறை தலைவர்கள் மற்றும் மாவட்ட பதிவாளர்கள் (நிரவாகம் மற்றும் தணிக்கை) ஆகியோரின் நவம்பர் 2023 மாத பணி சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசுச் செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, பதிவுத்துறை தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு

# ஓர் ஆம்புலன்ஸ் என்பதே இலக்கு!

## டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, டிச. 14 -

குறைந்தபட்ச மருத்துவ உபகரணங்கள் இல்லாமல் இயங்கும் ஆம்புலன்ஸ்களால் உயிரிழப்புகள் அதிகமாகிறதா? இதற்கு ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் பாரதி பர்வீன் பவார் அளித்த பதில் வருமாறு :-

மருத்துவ உட்கட்டமைப்பு, அவசர கால மருத்துவத் தேவைகளை உறுதிப்படுத்துவது, ஆம்புலன்ஸ் வசதிகளை ஏற்படுத்துவது போன்றவை மாநில அரசுகளின் நேரடி நிர்வாகத்தில் வருகின்றன. ஆனால் இந்த விஷயங்களை செயல்படுத்த மத்திய சுகாதார அமைச்சகம் மாநில அரசுகளுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்குகிறது. மாநில அரசின் கோரிக்கைகளுக்கு ஏற்ப இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன.

ஆம்புலன்ஸ்களைப் பொருத்தவரை, அவற்றை கட்டுப்படுத்தும் கால் சென்டர்கள், ஜி.பி.எஸ். கருவி, குறைந்தபட்ச மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றுக்கான நடைமுறைச் செலவுகளை மாவட்ட அளவிலான தொழில்நுட்ப வல்லுனர் கண்காணித்து சான்றிதழ் வழங்குகிறார். அதற்கேற்ப நிபந்தனைகளின் அடிப்படையில் ஒன்றிய அரசு அதற்கான நிதி உதவியை வழங்குகிறது.

அவசர அழைப்பு வந்தவுடன் எவ்வளவு விரைவாக அந்த ஆம்புலன்ஸ் குறிப்பிட்ட இடத்தை அடைகிறது? ஒரு நாளைக்கு எத்தனை முறை அது பயன்படுகிறது? இதரப் பயன்பாடுகள் போன்றவற்றை கணக்கிட்டே ஒரு ஆம்புலன்ஸின் செயல்பாட்டுத்திறன் முடிவு செய்யப்படுகிறது.

ஆம்புலன்ஸ்களின் செயல்பாடுகளை, தரத்தை உயர்த்தும் வகையில் தேசிய சுகாரத் திட்டத்தின்கீழ் தேசிய ஆம்புலன்ஸ் சேவைகள் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்புதான் குறைந்தபட்ச உயிர்காக்கும் வசதிகள் கொண்ட ஆம்புலன்ஸ்கள், உயிர்காக்கும் நவீன வசதிகள் கொண்ட ஆம்புலன்ஸ்கள், நோயாளிகளை அழைத்துச் செல்லும் வாகனங்கள் ஆகியவற்றை வாங்க உதவி செய்கிறது.



ஐந்து லட்சம் மக்கள் தொகைக்கு குறைந்தது ஒரு நவீன உயிர்காக்கும் கருவிகள் கொண்ட ஆம்புலன்ஸ் இருக்க வேண்டும்; ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு குறைந்தபட்ச உயிர்காக்கும் கருவிகள் கொண்ட ஒரு ஆம்புலன்ஸாவது இருக்க வேண்டும் என்று ஒன்றிய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

குறைந்தபட்சம் இந்த இலக்கை அடைய இன்னும் எத்தனை ஆம்புலன்ஸ்கள் தேவை என்பதை அறிந்து மாநில அரசுகள் அவற்றை வாங்கிக்கொள்ளலாம்.

இன்றைய தேதியில் நாடு முழுக்க 2,957 உயிர்காக்கும் நவீன கருவிகள் கொண்ட ஆம்புலன்ஸ்கள், 14,603 குறைந்தபட்ச உயிர்காக்கும் கருவிகள் கொண்ட ஆம்புலன்ஸ்கள், 4,259 நோயாளிகளின் பயணத்திற்கான வாகனங்கள், 17படகுகள், 81 இருசக்கர வாகனங்கள் ஆகியவற்றுக்கு தேசிய சுகாதாரத் திட்டத்தின்கீழ் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவை தவிர, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம்,ஒரு ஆம்புலன்ஸில் என்னவெல்லாம் வசதிகள் இருக்க வேண்டும், அதன் செயல்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை விளக்கி தேசிய ஆம்புலன்ஸ் விதிகள் ஒன்றை உருவாக்கி வெளியிட்டிருக்கிறது. அரசுத் துறைகள், என்.ஜி.ஓ.க்கள் இந்த விதிமுறைகள் படி ஆம்புலன்ஸ்களை இயக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைச்சர் பாரதி பர்வீன் பவார் பதிலளித்தார்.

### மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட

# மாவட்டங்களில் குழந்தைகளுக்கு தட்டம்மை - ரூபெல்லா தடுப்பூசி முகாம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, டிச.14-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் நேற்று (13.12.2023) மிக்ஜாம் புயல் மற்றும் கனமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, செங்கல்பட்டு காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி (Measles and Rubella vaccination) செலுத்தும் முகாமினைத் தொடங்கி வைக்கும் விதமாக, பெருநகர சென்னை மாநகராட்சி, ஆழ்வார்பேட்டை, சி.பி.ராமசாமி சாலை, பீமனம்பேட்டை நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையத்தில் தடுப்பூசி முகாமினைத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது;

மிக்ஜாம் புயல் பாதிக்கப்பட்ட சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய 4 மாவட்டங்களில் 9 மாதம் முதல் 15 வயது வரையிலான இளம் சிறார்களுக்கு தட்டம்மை, ரூபெல்லா தடுப்பூசி போடும் பணி நேற்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த முகாம்கள் 13.12.2023 முதல் 30.12.2023 வரை 15 நாட்கள் தொடர்ச்சியாக நடைபெறும். அங்கன்வாடி மையங்கள், துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகிய இடங்களில் இந்த தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசிகள் போடப்படுகிறது.

பள்ளிகளை பொருத்தவரை RBSK எனும் நடமாடும் மருத்துவ குழு வாகனங்களின் மூலம் தடுப்பூசிகள் போடும் பணி நடைபெறுகிறது. மேற்குறிப்பிட்ட 4 மாவட்டங்களை பொருத்தவரை 9 மாதம் தொடங்கி 15 வயது வரையிலான இளம் சிறார்களின் எண்ணிக்கை 27.42 இலட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அந்த குழந்தைகளுக்கு ஏற்கனவே 2 தவணை தடுப்பூசிகள் போடப்பட்டிருந்தாலும், மழைக்கால நோய்களில் இருந்து காக்கும் பொருட்டு, கூடுதல் தவணை தடுப்பூசிகள் போடப்படுகிறது. இந்த தடுப்பூசிகளை பொருத்தவரை விரையம் உட்பட 36 இலட்சம் தடுப்பூசிகள் தேவைப்படுகிறது. ஒன்றிய அரசிடம் இருந்து 10 இலட்சம் தடுப்பூசிகள் கோரப்பட்டுள்ளது, விரைவில் அவை தமிழ்நாடு மாநிலத்திற்கு வரும். தற்போது 2.90 இலட்சம் தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளது. தடுப்பூசி தட்டுப்பாடு ஏற்படாதவாறு அனைத்து நடவடிக்கைகளும் தமிழ்நாடு அரசின் மருத்துவத்துறை எடுத்துள்ளது.

### மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள்

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப, மழை பாதிப்பிற்கு பிறகு பல்வேறு நடவடிக்கைகள் மருத்துவத் துறை எடுத்து வருகிறது. குறிப்பாக 04.12.2023 மற்றும் 05.12.2023 ஆகிய நாட்களில் மழைப்பொழிவும் புயல் பாதிப்பும் இருந்தது. 06.12.2023 அன்று மருத்தவத் துறையின் சார்பில் 300 நடமாடும் மருத்துவ வாகனங்கள் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய 4 மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டது. அந்த வகையில் சென்னையில் மட்டும் 160 வாகனங்களும், செங்கல்பட்டு மாவட்டத்தில் 60 வாகனங்களும், திருவள்ளூர் மாவட்டத்தில் 50 வாகனங்களும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 30 வாகனங்கள் 06.12.2023 முதல் 12.12.2023 வரை ஒரு வார காலமாக மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன.

பத்திரிகையாளர்கள் நன்பகத்தன்மையுடன் செய்தி வெளியிட வேண்டுகோள்:

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் செய்தியாளர்களை மதிப்பவர், செய்தியாளர்களின் கேள்விகளுக்கு தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து அதனை உடனடியாக தெரிவிப்பவர். அவர்களின் வழியில் தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் நாங்களும் நடத்துக்கொண்டிருக்கிறோம். நேற்று தந்தி தொலைக்காட்சி நிருபர் தாயுமானவன் செய்தியாளர்கள் சந்திப்பில் கேள்வி ஒன்றினை கேட்டிருந்தார். ஒரு செய்தியினை ஒளிபரப்புவதற்கு முன்னாள் அதன் உண்மைத் தன்மையினை கண்டறிந்து போடவேண்டும் என்பது பத்திரிகை தர்மம் ஆகும்.

நேற்று இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் உயர் பட்ட படிப்பு (M.ch) மாணவர் ஒருவர் இறந்துள்ளார். அவர் பணிச்சுமையின் காரணமாக தான் இறந்தார் என்று தந்தி தொலைக்காட்சியும் மற்றொரு தொலைக்காட்சி நிருபரும் அபாண்டமான குற்றச்சாட்டை கேள்வியாக கேட்டனர். அந்த இறந்த மருத்துவ மாணவர் பணியில் சேர்ந்து 6 நாட்கள் தான் ஆனது, மேலும் அவருக்கு 1 நாள் கூட பணி ஒதுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அவராகவே ஒரு அறுவை சிகிச்சையின் போது வந்து பார்வையாளராக மட்டுமே இருந்தார். இப்படி இருக்கும் நிலையில் அந்த முதுநிலை மருத்துவ மாணவர் எப்படி பணிச்சுமையின் காரணமாக இறந்திருக்கக் கூடும் என்பதை நினைத்து பார்க்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் டாக்டர்.ஜெ.இராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம) சங்கர்லால் குமாவத், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று நீலகிரி உதகையில் அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரியில் ஆய்வு செய்து கட்டுமானப் பணிகளை பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி மு. அருணா, மருத்துவகல்லூரி முதல்வர், மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளனர்.

### எண்ணூர் கிரீக் பகுதியில்

# எண்ணெய் கசிவை விரைந்து அகற்ற நடவடிக்கை!

## 75 படகுகள் - 300 பணியாளர்கள் தீவிரம்!

சென்னை, டிச. 14 -

எண்ணூர் கிரீக் பகுதி எண்ணெய் கசிவை விரைந்து அகற்ற

75 படகுகளில் 300 பணியாட்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மாநில எண்ணெய் நெருக்கடி மேலாண்மை குழு கூட்டம் தலைமை செயலாளர் சிவ்தாஸ்மீனா, தலைமையில் நேற்று நடைபெற்றது. தமிழ்நாடு அரசின் உயர் அதிகாரிகளும், சென்னை பெட்ரோ கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் (CPCL) அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். எண்ணூர் கிரீக் பகுதியில் நடைபெற்று வரும் நிவாரணப் பணி களையும், பாதிக்கப்பட்ட கிராமங்களையும் இந்தக் குழு ஆய்வு செய்தது. தற்போது, அப்பகுதியில் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. எண்ணெய் பரவுவதைக் தடுப்பதற்காக பூமர்கள் (Boomers) வைக்கப்பட்டுள்ளன.

கிரீக்கிலிருந்து எண்ணெய் எடுப்பதற்காக எண்ணெய் ஸ்கிம்மர் இயந்திரம் இன்று பயன்படுத்தப்பட்டது. அடுத்த 2 நாட்களில் மேலும் நான்கு எண்ணெய் ஸ்கிம்மர்களை பயன்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. நிவாரணப் பணிகளை விரைவுபடுத்திட 75 படகுகள் மற்றும் 300 பணியாட்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்தப் படகுகள், தண்ணீரின் மேற்பரப்பிலிருந்து எண்ணெயை உறிஞ்சி பாதுகாப்பாக கரைக்கு கொண்டு செல்லும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேற்பரப்பில் இருந்து எண்ணெயை உறிஞ்சுவதற்கு நான்கு கல்லி சக்கர் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஜே.சி.பி மற்றும் பிற சாதனங்களைக் கொண்டு அருகிலுள்ள கிராமங்களில் இருந்து எண்ணெய் படிந்த குப்பைகளை சுத்தம் செய்யும் பணி தொடங்கியுள்ளது. அதிக எண்ணிக்கையிலான எண்ணெய் பூமர்கள், ஸ்கிம்மர்கள் மற்றும் பயிற்சி பெற்ற மனி வளத்தைப் பயன்படுத்துவதன் மூலம் எண்ணெய் அகற்றும் பணிகளை மேலும் விரைவு படுத்திட சென்னை பெட்ரோ கெமிக்கல்ஸ் நிறுவனத்திற்கு (CPCL) உத்தர விடப்பட்டு ள்ளது. அருகில் உள்ள கிராமங்களில் வசிக்கும் பொது மக்களின் ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சிறப்பு மருத்துவர்கள் அடங்கிய நடமாடும் மருத்துவ முகாம்களை அமைத்துள்ளது. அருகிலுள்ள கிராமங்களில் பாதிக்கப்பட்ட சாலைகள் மற்றும் செல்லப் பிராணிகளுக்கு சிகிச்சை அளிக்க சிறப்பு முகாமையும் ஏற்பாடு செய்துள்ளது. வனத்துறை, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB), சுற்றுச்சூழல் துறை ஆகியவற்றின் கண்காணிப்புக் குழுக்கள் கரையோரங்களில் நிறுத்தப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாஹூ உள்ளிட்ட மூத்த அதிகாரிகள், எண்ணெய் அகற்றும் இடத்திற்கு சென்று பார்வையிட்டு தக்க அறிவுரைகள் வழங்கி வருகின்றனர்.

எண்ணெய் அகற்றும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பணியாளர்களின் நலன்களை பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை களையும் மேற்கொண்டு உறுதிப்படுத்துமாறு சென்னை பெட்ரோ கெமிக்கல்ஸ் நிறுவனத்திற்கு (CPCL) உத்தரவிடப்பட்டுள்ளது. பணியில் ஈடுபட்டுள்ள குழுக்களுக்கு பாதுகாப்பு கியர் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் வழங்கப்படுவதை உறுதி செய்யுமாறு சென்னை பெட்ரோ கெமிக்கல்ஸ் நிறுவனத்திற்கு (CPCL) அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டு, பாதிக்கப்பட்டவர்களின் பெயர் முதலான விவரங்களை நிவாரண ஆணையரிடம் வழங்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் மீன் வளத்துறையின் இயக்குநர் ஆகியோருக்கு எண்ணெய் நெருக்கடி மேலாண்மை குழு உத்தரவிட்டுள்ளது.

### மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்

# அறங்காவலர் நியமனம் சரியே!

## உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, டிச. 14-

மதுரை, மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் நியமனம் சரியே என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் நியமனத்தில் எந்தவித விதிமீறலும் இல்லை என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை தெரிவித்துள்ளது. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் குழு நியமனத்தை ரத்து செய்யக் கோரிய மனுவை நேற்று (13.12.2023) தள்ளுபடி செய்த சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, அறங்காவலர் குழுவில் 3 பெண்களை இடம்பெறச் செய்தது நீதிமன்றத்துக்கு மிகவும் திருப்தி அளிக்கிறது எனவும் நீதிபதிகள் பாராட்டு தெரிவித்தனர்.

### இரா.லட்சுமணன் - எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் - நேதாஜி யு.கணேசன் பங்கேற்பு! ஆர்.கே.நகரில்

# திருநங்கைகள் 500 நபர்களுக்கு நிவாரண உதவிகள்!

## ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, டிச. 14-

ஆர்.கே.நகரில் திருநங்கைகள் 500 நபர்களுக்கு நிவராண உதவிகளை ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் இரா.லட்சுமணன், எஸ். ஜெபதாஸ் பாண்டியன், நேதாஜி யு.கணேசன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

மிக் ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட ஆர். கே.நகர் தொகுதியை சார்ந்த திருநங்கைகள் 500 நபர்களுக்கு 5 கிலோ அரிசி, பெட்ஷீட், ரீ பைண்ட் ஆயில், ரவை, மைதா உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே. ஜே.எபினேசர் வழங்கினார்.

இதில் பகுதி கழக செயலாளர்கள் இரா.லட்மணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன், மாவட்ட அவை தலைவர் ஆர்.வெற்றிவீரன், மாமன்ற உறுப்பினர் ரேணுகா காவேரி செல்வம், பகுதி நிர்வாகிகள்: என். அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, எஸ்.பி.எஸ்.புத்தன், வட்ட கழக செயலாளர்:ப. குமார், ஜெ.சுரேஷ் பாபு, ஆர்.ஜி.பாபு, எல்.அரசு,ஏ. மைக்கல், பிரபாகரன், கோ.கார்த்திகேயன், ஜி.எம். பிரபு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





ஆர்.கே.நகரில் திருநங்கைகள் 500 நபர்களுக்கு நிவராண உதவிகளை ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், நேதாஜி யு.கணேசன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## புதுக்கோட்டை மு. இயலரசன்

### டிசம்பர் 14 (1992)



**இளமைப் பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு, கழகம் துவங்கிய பின்னர் கழகக் கிளைகளை பட்டிதொட்டியெங்கும் பரப்பியவர்.**

**ஆசிரியராகப் பணியாற்றி வந்த இவர், கழகப் பணிக்காக தனது பணியினைத் துறந்தவர்.**

**'தன்மானம்' என்ற வார இதழ் நடத்தியவர்.**

**"ஈட்டி முனைபோல் கழகத்தின் கொள்கைகளை மேடைகளில் எடுத்தெறிந்து வீசுபவர்" என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**